செ.வெ.எண்: 377 நாள்:30.06.2021

2021-2022 ஆம் நிதியாண்டிற்கான நில எடுப்புத்திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் வசிக்கும் வீடற்ற ஆதிதிராவிடர் இன மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு நிலங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் ஆதிதிராவிடர் இன மக்களுக்கு வீட்டுமனை வழங்க ஏதுவாக தனியார் பேச்சு வார்த்தை மூலம் நிலம் கையகம் செய்திட அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது.

எனவே அரசு நிர்ணயிக்கும் விலைக்கு நிலத்தை தர முன்வரும் நிலஉரிமையாளர்கள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.ஆதிதிராவிடர் நலத்துறையின் பெயரில் நிலம் பதிவு செய்யப்பட்டவுடன் அதற்கான கிரையத்தொகை உடனடியாக நில உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.